# 32. வாழ்வியலும் கும்மிப்பாடல்களும் (இலங்கையின் யாழ்ப்பாணப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

முனைவர் திருமதி சுகன்யா அரவிந்தன்
விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## அறிமுகம்

நாட்டுப்புறக் கலைகள் தாம் தோற்றம் பெறுகின்ற சமூகத்தின் பழக்க வழக்கங்களைப் படம் பிடித்துக் காட்டுவன. இவற்றுள் கிராமியப் பாடல்கள் மிகவும் முக்கியம் பெறுகின்றன. தமிழர் வாழ்வியலானது பாடல்களுடனும் ஆடல்களுடனும் சடங்காசாரங்களுடனும் ஒன்றிக் கலந்தவை. இந்தப் பாடல்களையும் ஆடல் முறைகளையும் சடங்காசார வழக்கங்களையும் அறிந்தும் புரிந்தும் கொள்வதன் மூலம் அந்த சமூகம் பற்றித் தெரிந்து கொள்ள முடிகின்றது. இந்த வகையிலே இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழுகின்ற வட புலத்திலே அதாவது யாழ்ப்பாணத்திலே தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்து வழக்கிலிருக்கக் கூடிய கும்மிப் பாடல்கள் பற்றியும் அவற்றின் வகைப்பாடுகள் பற்றியும் இந்த ஆய்வுக்கட்டுரை ஆராய முற்படுகின்றது. இதன் வழி யாழ்ப்பாணச் சமூகத்தையும் அதன் செல் நெறியினையும் தெளிவாகத் தரிசிக்கமுடிகின்றது.

பொதுவாக இலங்கையின் வடபுலத்திலே எழுந்த செந்நெறி இலக்கியங்கள் காட்டாத, காட்டத் தவறிய, காட்ட விரும்பாத பல்வேறு செய்திகளைத் துல்லியமாகக் காட்டும் ஒரு இலக்கிய வடிவமாக இந்தக் கும்மிப் பாடல்களைக் குறிப்பிடலாம் என்று பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா அவர்கள் தன்னுடைய ஆய்வு நூல் ஒன்றிலே எழுதிச் செல்வதிலிருந்து யாழ்ப்பாணக் கும்மிப் பாடல்கள் சமூகத்திலே பெற்றிருக்கக் கூடிய இடம் பற்றித் தெரிந்து கொள்ள முடிகின்றது. சமூக வரலாற்று ஆய்வாளர்களுக்கு இலக்கியங்கள் பலவும் ஆய்வுத் தேடலுக்கு மிகவும் உதவியாக காலந்தோறும் இருந்திருக்கின்றன. யாழ்ப்பாணச் சமூக வரலாற்றை, விழுமியங்களை நேரடியாகத் தரிசிக்க, விளங்கிக்கொள்ள உதவும் ஆவணமாக இங்கு தோன்றிய கும்மிப் பாடல்களைக் கொள்ளலாம்.

இலக்கியங்களை வாய்மொழி இலக்கியம், நியம இலக்கியம் என இரு வகைகளாக வகுக்க முடியும். கும்மிப்பாடல்கள் வாய்மொழி இலக்கிய வழியிலேயே தோன்றியவை. மண்ணின் வாழ்வியலைப் புரிந்து கொண்டு பாடப்பட்டவையே கும்மிப்பாடல்கள் எனலாம். பொதுவாகக் கும்மிப்பாடல்களின் தலைப்புக்கள் அவற்றின் சமூகத்தன்மையை, நோக்கு நிலையைச் சுட்டிக்காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்திலே தோற்றம் பெற்ற ஞானக்கும்மி, மிலேச்ச மதக்கும்மி,யாழ்ப்பாண சுவதேசக்கும்மி, கோப்பி கிருசிகக் கும்மி, மலேரியாக்கும்மி, பண்ணைப்பாலக்கும்மி, அழகம்மா கும்மி, அழகம்மா திருமண அலங்கோலக்கும்மி, முதலான கும்மிப்பாடல்களின் தலைப்புக்கள் இவற்றின் உள்ளடக்கத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிட முடியும்.

யாழ்ப்பாணத்திலே சாதாரன மக்களுக்காகத் தோன்றிய இக்கும்மிப்பாடல்களை இயற்றியவர்களுட் பெரும்பாலானோர் செந்நெறி இலக்கியங்களைப்படைத்த, கல்வித்துறையிலே 'புகழ் பெற்ற புலவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுன்னாகம் முத்துக்குமாரகவிராயர், சுன்னாகம் அ குமாரசாமிப்புலவர், பாவலர் துரையப்பாபிள்ளை, கல்லடிவேலுப்பிள்ளை, அகிலேசசர்மா முதலியோர் கும்மிப்பாடல்கள் எழுதியோர் வரிசையிலே குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியவர்கள். இத்தகைய இலக்கியத்துறை போந்தோர் கும்மிப்பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடல்களை யாத்தமைக்குக் கும்மிப்பாடல்களின் அமைப்பு, பொருளமைதி மற்றும் இயல்பு போன்றவையே காரணமாக அமைகின்றது என்றால் மிகையில்லை.

செந்நெறி இலக்கியத்திலே பரிச்சயமில்லாத, எழுத்தறிவு குறைந்த மக்களைச் சென்றடையக்கூடிய வடிவமாக கும்மிப்பாடல்கள் காணப்படுவது, செந்நெறி இலக்கியத்தினூடு பேசமுடியாதவற்றை அந்தக்கும்மிப்பாடல்களின் வழி பேசிவிட முடியும் என்பதாலும், கும்மிப்பாடலுக்கான இசை ஆடவும், பாடவும் ஏற்ற வகையிலே அமைந்திருப்பதால் பலரையும் கவரக்கூடிய இயல்புடையது என்பதாலும், சமூகச் சார்பாக செய்திகளைச் சொல்வதற்கு ஏற்ற இலக்கிய வடிவமாக இந்தக்கும்மிப்பாடல்கள் இருப்பதும் கற்றவரும் கும்மிப்பாடல்களிலே தம் ஈடுபாட்டினைச் செலுத்துவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றது. இத்தகைய காரணங்களால் கும்மிப்பாடல்கள் சமூகத்திலே முதன்மையான இடம் பெற்றிருந்தது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையிலே கும்மிப்பாடல்களின் பாடுபொருட்களின் அடிப்படையிலே பலவாறாக வகுத்து நோக்க முடியும்.

1. மதமாற்றம்.
2. அரச உத்தியோகத்தர்கள் பற்றியது.
3. நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றியது.
4. சமூகத்திலே இருக்கக்கூடிய சாதிய வகைப்பாடுகள் பற்றியது.
5. பெண்களின் நிலைகள் பற்றியது.
6. வரலாற்றுச்செய்திகள்
7. தொழில் சார் நடைமுறைகள் - குறிப்பாக விவசாயம்

## மதமாற்றம்

இலங்கை வரலாற்றிலே கி பி 17,18,19ம் நூற்றாண்டுகளிலே மாறி மாறி அந்நியர்களது ஆட்சியின் கீழ் இருந்து வந்தது என்பது யாழ்ப்பாண வரலாறு சுட்டும் உண்மை. இருந்தாலும் 19ம் நூற்றாண்டிலே கிறிஸ்தவ மதமாற்றம் யாழ்ப்பாணத்திலே மிகவும் முனைப்பாக செயற்பாட்டிலிருந்த காலமாகும். அவ்வேளையிலே கிறிஸ்தவ மிஷனரிமார் சைவத்திற்கு எதிராகவும், சைவ சமயிகள் கிறிஸ்தவத்திற்கு எதிராகவும் பல கண்டனங்களை பிரசுரித்து சமூகத்திலே பரவச்செய்தது வரலாறு கூறும் செய்தி. இந்த நிலையிலே மக்கள் அனைவருக்கும் தம் கருத்தை இலகுவில் புரிந்து கொள்வதற்காக இவர்களால் கண்டனக் கும்மிகள் பல இயற்றப்பட்டிருக்கின்றன. ஒருவகையிலே கூறப்புகின்போது மக்களை நோக்கிய சமய கண்டன இலக்கியமாகக் கும்மிப்பாடல்கள் வெளிவந்திருக்கின்றன என்று பேரா. எஸ் சிவலிங்கராஜா அவர்கள் தன்னுடைய எழுத்துக்களிலே குறித்துச்செல்வதைக் காணமுடிகின்றது. ஞானக்கும்மி, யேசு மத பரிகாரம், மிலேச்சமத விகற்பக் கும்மி முதலானவை குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியவை. இவை மக்களுக்குப்புரிவித்தல் என்ற கருத்தை முதன்மை நோக்காகக் கொண்டு இருந்தமையால் பேச்சு வழக்கிலேயே எழுதப்பட்டிருக்கக் காணலாம். மேலும் பழமொழிகள், மரபுத்தொடர்கள் என்பவற்றுடன் கூடி, எவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே அவை எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் நையாண்டித்தன்மையுடன் கூடிய நகைச்சுவை உணர்வும் இங்கு மேலோங்கியிருக்கக் காணலாம்.

> 'சொல்லும் பிற சமயங்களினின்றவர்
> சோற்றுக்கும் சீலைக்கு மிந்தப்பொய் மார்க்கத்தைப்
> புல்லிக்கொண்டா னென்பதற் கொருசான்று
> புகலவும் வேண்டுமோ ஞானப்பெண்ணே'
>
> (ஞானக்கும்மி 115)

> 'தனமார்க்க மல்லாமற் பிறமதக் காரரைத்
> தண்டனை செய்து சமயத்துளாக்கினர்
> கன்மார்க்க நெஞ்சர் சிலுவை தலைப்பாவில்
> கட்டவிதித்தனர் ஞானப்பெண்ணே'
>
> (உத்தியோக லட்சணக்கும்மி – 29)

## அரச உத்தியோகத்தர்கள் பற்றியது

இலங்கையிலே ஆங்கிலக்கல்வி முறைமையினால் அரச உத்தியோகம் பெற்றவர்களின் நடைமுறைகளை விபரிப்பனவாகவும் கும்மிப்பாடல்கள் எழுந்தன. உத்தியோக லட்சணக்கும்மி, அழகம்மா கும்மி, பண்ணைப்பாலக்கும்மி முதலியனவும் அக்கால அரசாங்க முறைகளை விமர்சனம் செய்வதாகவும் அமையப்பெற்றிருக்கின்றது.

அரச உத்தியோகத்தர் பலவழிகளிலும் செய்யும் ஊழல்களைக் கண்டிக்கும் தன்மையுடையதாகவும் எழுதப்பட்டது உத்தியோக லட்சணக்கும்மி.

'வில்சிங்க ரம்மாவும் தத்துவம் பெற்று
வேண்டிய முத்திரை விற்று வருகிறார்
நல்ல பிழைப்புத் தரணிமாரு மிதை
நாடுவரோ வினி ஞானப் பெண்ணே' (உத்தியோக லட்சணக்கும்மி 111)

## நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றியது

யாழ்ப்பாணத்திலே கோர்ட்டு (ஊழரசவ) நீதிமன்ற வழக்குகள் பற்றியும் நீதிபதிகள், மற்றும் சட்டத்தரணிகள் பற்றிய குறிப்புக்கள் பல இந்தக்கும்மிப்பாடல்களிலே எழுதப்பட்டிருக்கின்றன. வழக்குகளை நடத்தும் சட்டத்தரணிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அவர்களது குறை நிறைகளை இந்தக்கும்மிப்பாடல்கள் வாயிலாகப் புலவர்கள் சமூகத்திற்குத் தெரிவித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர். இந்தக்கருப்பொருள் கொண்ட கும்மிப்பாடல் வரிகள் வருமாறு,

மேளதாளங் கொட்டி யாலவட்ட மீட்டி
மேம்பாடுடன் துரை பாங்கு செல்ல
ஆதிசிவியார் சுமக்கப் பல்லக்கின்
மீதுவருவாராம் ஞானப்பெண்ணே'
(உத்தியோகலட்சணக்கும்மி, 88 – 92 பக் 16)

## சமூகத்திலே இருக்கக்கூடிய சாதிய வகைப்பாடுகள் பற்றியது

ஆங்கிலக்கல்வியின் அறிமுகம் அதன்வழி அரச உத்தியோகத்துக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தியது. ஆனால் இந்த வாய்ப்பானது சமூகத்தின் உயர்வர்க்கத்தினருக்கு மாத்திரமே அதிக சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அரச வேலை வாய்ப்பிற்காக மக்கள் கிறிஸ்தவ மதத்தை நாடினர். சமூகத்தின் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சிலரும் இந்த வழியைப் பின்பற்றி கல்வி பெற்று சில அரச பதவிகளைப்பெற்றனர். இந்நிலையின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலே சாதி முறை மெல்ல மெல்லத் தளரத் தொடங்குவதைக் கும்மிப்பாடல்கள் வாயிலாக தெளிவாகத்தரிசிக்க முடிகின்றது.

'சாதிகள் தத்தம் முறையிற் பிறழாமல்
தண்டனை செய்தாரைப் பண்டுபோல் வைத்தனர்
வேதியர் வேளாளர் செட்டிமார்க் கப்போ
வெகுமரியாதையாம் ஞானப்பெண்ணே'
(உத்தியோகலட்சணக்கும்மி 46)

## பெண்களின் நிலைகள் பற்றியது

அந்தக்காலத்திலே யாழ்ப்பாண சமூகத்திலே பெண்களின் நிலையைக் கண்டுகொள்ளக் கும்மிப்பாடல்கள் மிகவும் உதவுகின்றன. பொதுவாகக் கும்மிப்பாடல்களிலே பெண் விடுதலைக் கருத்துக்களைக் கண்டுகொள்ள முடிவதில்லை. பெண் அடக்குமுறைக் கருத்துக்களையே காணமுடிகின்றது. பெண்களின் ஒழுக்கம், கற்பு, நடை உடை பாவனை முதலானவை கும்மிப்பாடல்களிலே விமர்சிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, பெண்கள் ஆண்களோடு நிகராக வாழ்வதை, பழகுவதை கும்மிப்பாடல்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

'வாலிபரோடு குமரிகள் கூடி
மருவியிருந்து கடதாசி சொக்கட்டான்
ஆடலும் பந்து அடித்தலும் நீதியென்
றார் சொல்லுவாரென்று பாருமடி'
(அழகம்மாகும்மி - 99)

இவ்வாறு பெண்களை இழிவுபடுத்துவது மாத்திரமன்று பெரும் கல்வி கேள்விகளில் பெண்கள் உயர்வதையும் தவறென்ற கருத்தும் கும்மிப்பாடல்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. அதாவது பெண்களை அடக்கியாழும் சமூகத்தை படம் பிடித்துக்காட்டுவதாக இந்தக் கும்மிப்பாடல்களின் வழி அறிந்துகொள்ளமுடிகின்றது.

'பெண்களைச் சம்மாசனத்தில் இருத்தல்
பெரிய வரசர்க்குச் சங்கையல்ல
எங்களை யாண்ட துரைமாரு முன்னாளி
லிப்படிச் செய்தாரோ ஞானப்பெண்ணே'
(உத்தியோகலட்சணக்கும்மி – 25- 37)

என்கின்ற கும்மிப்பாடல் வரிகள் இந்தக்கருத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

## வரலாற்றுச்செய்திகள்

யாழ்ப்பாணத்து அரசியல் பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டவும் வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யவுமெனப் பல கும்மிப்பாடல்கள் இயற்றப்பட்டன. உத்தியோகத்தர் கும்மி, அழகம்மா திருமண அலங்கோலக்கும்மி, பண்ணைப்பாலக்கும்மி முதலானவற்றைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

## தொழில் சார் நடைமுறைகள் - பற்றியது விவசாயம்

கும்மிப்பாடல்கள் பாடவும் ஆடவும் ஏற்றவை. அந்த வகையிலே நிலவுடைமை உற்பத்திக் கோலங்களிலும் இந்தக் கும்மிப்பாடல்கள் இடம்பெறத் தவறவில்லை. விவசாயத்திற்கும், விதை விதைத்தலுக்கும், களை பிடுங்குதல், தூற்றுதல் போன்ற பல நடவடிக்கைகளிலும்



CamScanner

இந்த கும்மிப்பாடல்கள் இடம் பெறத்தவறவில்லை. இந்நிலையிலே தொழில் புரியும் வேளையிலே களைப்பைப் போக்குவதற்காகவெனப் பாடப்படுகின்ற இந்தப்பாடல்களின் வழி, தொழில் புரிவோனுக்கும் நிலவுடைமைக்காரருக்கும் இடையே இருக்கக்கூடிய உறவு நிலைகளையும், அந்தப் பண்பாடுசார்ந்த வழக்கடிபாடுகளை எடுத்துக்கூறும் சந்தர்ப்பங்களையும் வாசிப்போர் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

'கும்முதல்' என்கின்ற சொல் யாழ்ப்பாணப்பேச்சு வழக்கிலே பயன்பாட்டிலிருக்கின்ற சொல்லாகும். வுளம்பெருக்கத்துக்கும் கும்மி நடனத்துக்கும் மிகவும் நெருங்கி தொடர்புண்டு. வயலிலே பணிபுரிவோர் வயல்களின் நடுவே இந்தக் கும்மிப்பாடலைப் பாடி ஆடினார்கள் என்ற தகவல்களை யாழ்ப்பாணப்பரப்பிலே பெற முடிகின்றது.

யாழ்ப்பாணத்திலே வயல் சூழ்ந்த பிரதேசங்களான அராலி, துணைவி, பறாளை, யாக்கரை, இமையாணன், அரியாலை, சரசாலை போன்ற பிரதேசங்களிலே வயல்வேலை புரிவோர் சூடுமிதிப்புக்குப்பின்னர் கும்மிப்பாடல் பாடி நடனம் ஆடுவது வழக்கம்.

'கொத்து நிறைய முத்திருக்குது
கோயில் வயலும் வெளிச்சிருக்குது
சித்திரைக் கஞ்சிக்குப் படியளக்க
சிங்காரப் பெண்ணே கும்மியடி' (சபா ஜெயராசா)


இவை தவிர தொழில்முறை சார்ந்து நோக்கும்போது இஞ்சிக்கும்மி, மஞ்சட் கும்மி, தினைக்கும்மி, கொத்துக்கும்மி, வெற்றிலைக்கும்மி என பயிர்செய்கின்ற பொருட்களை முதன்மைப்படுத்தி தொழிபுரிகின்றபொழுது கும்மிப்பாடல்கள் பாடப்பட்டிருப்பதான தகவல்களும் கிடைக்கின்றன.

குறிப்பாக 'விளாம்பழக்கும்மி' என்ற ஒரு வகைக்கும்மிப்பாடல் வகையும் யாழ்ப்பாணத்திலே காணப்படதாக பதிவுகள் காணப்படுகின்றன. அதாவது விளாம்பழங்கள் பழுத்து விழுகின்ற காலத்திலே அவற்றைக் கையிலேந்தி அடித்து விளையாடுவது வழக்கம். அந்த சந்தர்ப்பதிலே பாடப்படுகின்ற கும்மிப்பாடல்கள் பலவும் யாழ்ப்பாணத்திலே இருந்தமைக்கான பதிவுகள் கிடைக்கப்பெறுகின்றன.

## முடிவுரை

இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்திலே கும்மிப்பாடல்கள் பண்பாட்டோடு பின்னிப் பிணைந்திருந்தது. ஒருகாலத்திலே நாட்டுப்புறக்கலைகள் சமூகத்தின் கண்ணாடி என்கின்ற கலைத்தத்துவத்துக்கேற்ப கும்மிப்பாடல்கள் தாம் தோற்றம்பெற்ற பண்பாட்டினைப் படம் பிடித்துக்காட்டுவதாக இருக்கின்றன. கும்மிப்பாடல்களின் வழி இந்த சமூகத்தைப்புரிந்து கொள்ள முடிகின்றது என்பது இந்த கட்டுரை வாயிலாகப் புலனாகின்றது.

நாட்டாரியல் கலைகள் மண்வாசம் மிக்கவை. மண்ணோடு கூடி வாழ்பவை. இவை போற்றிப்பாதுகாக்கப்பட வேண்டியது சமகால சமூகத்தின் கடமை.





CamScanner